★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 15 ரம்ழா 28 இதழ் 135
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-6-84

## இடம்பெயர்ந்த மலையக ஆசிரியர்களுக்கு பதவி விலகல் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)
இன்னமும் தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்லாத மலையகப்பாடசாலைகளில் கற்பிக்கும் இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு நுவரேலியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனப் ஏ. இஸட் ஓமார்தீன் பதவியிலிருந்து விலகிக்கொண்டதாக அறிவித்துக்கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

இதுபற்றி இவ்வாசிரியர்கள் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவத்துடன் தொடர்பு கொண்டதையடுத்துஇவ்வாசிரியர்களை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கான முயற்சியில் திரு. மகாசிவம் ஈடுபட்டுள்ளார்.

நேற்றுஅவர் ஜனப் ஓமார்தீனுடன் தொலைபேசியில்தொடர்புகொண்டு பேசியபோது 90 வீதமான இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் திரும்பிவிட்டார்களென்றும் 10வீதமானோர் சுகவீனம்காரணமாகத் திரும்பாமல் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் திரும்பிச்செல்கையில் மருத்துவச் சான்றிதழ்களைச்

(8ம் பக்கம் பார்க்க)

---

● தமிழ்நாட்டிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகள் குறித்து

# இந்திராவிடம் ஜே. ஆர். உறுதிமொழி எதிர்பார்ப்பார்

(கொழும்பு)

**ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடத்தும் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையின் போது இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னை முக்கியமான இடத்தை பெறுமென்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.**

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும், திங்கட்கிழமையும் இந்தியப் பிரதமரை இரு தடவைகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது தமிழ்நாட்டிலுள்ள தமிழ் தீவிரவாதிகள் இந்தியத்தமிழர்களின் உதவியைப் பெறமாட்டார்கள்என்றஉறுதிமொழியை ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்தியப் பிரதமரிடமிருந்து பெற்றுக்கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தையில் போது இலங்கைத் தமிழர் பிரச்னையைத்தீர்க்கும் முகமாக சர்வகட்சி மகாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கான புதிய திகதி பற்றித் தீர்மானிக்கப்படுமென்றும் கூறப்பட்டது.

இலங்கை இராணுவத்திற்குப்பயிற்சியளிக்க இஸ்ரேலியர்களை அமர்த்தியது பற்றியும், தமிழ்த்தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டி பிரிட்டனின் கூலிப் படையை அமைக்கும் விவகாரம் தொடர்பாகவும் இந்திய அரசாங்கம் இலங்கையிடம் தனது அதிருப்தியை இப்பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தையில் இந்தியப்பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ்வும் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் ஒழுங்குகளைக் கவனிப்பதற்காகத் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நேற்று அதிகாலை புதுடில்லி போய்ச் சேர்ந்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன எதிர்வரும் சனிக்கிழமை புதுடில்லி செல்வார். இவரின் விஜயத்தையடுத்து புதுடில்லியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள தமிழ்த் தீவிரவாதிகளும் கடுமையான கண்காணிப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன இந்திய விஜயத்தின்போது மகாத்மாகாந்தி சிலைக்கும் அஞ்சலி செலுத்துவார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன

(8ம் பக்கம் பார்க்க)

## நரசிம்மராவ் - லலித் விரிவான பேச்சுவார்த்தை

[புதுடில்லி]
தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுப் புதுடில்லியில் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ்வைச் சந்தித்து இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தை ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்றது. திரு. அத்துலத்முதலி இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், இந்திய பிரதமரின் விசேட தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி ஆகியோரையும் சந்தித்துஇலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார், (வெ)

## இந்திய ஜனாதிபதி இரவு விருந்து

புதுடில்லி ஜூன் .28
ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவைக் கௌரவித்து இந்திய ஜனாதிபதி திரு. ஜானிஸெயில்சிங் எதிர்வரும் சனிக்கிழமை இரவு விருந்துபசார மொன்றை அளிக்கவுள்ளார். (வெ)

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டு

(கொழும்பு)
ஆயிரம் ரூபா கள்ளநோட்டுகள் தற்போது புழக்கத்திலுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது

---

பல்கலைக்கழக மாணவர் பிரச்னை:

## பிரதமர் - எதிர்க்கட்சி பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை

(கொழும்பு)
பல்கலைக்கழக மாணவர் பிரச்னை தொடர்பாக பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா எதிர்வரும் சனிக்கிழமை அநுராதபுரத்தில் நான்கு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள்கட்சி ஆகிய நான்கு கட்சிகளின் பிரதிநிதிகளுடனேயே பிரதமமந்திரி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து இந்த எதிர்க்கட்சிகள் பிரதம மந்திரிக்குக் கடிதம் எழுதியிருந்தன. (வெ)

## ஒப்ரோய் ஹோட்டலில் குண்டு வெடிப்பு

(கொழும்பு)
'லங்கா ஒப்ரோய்' ஹோட்டலில் நேற்று பகல் ஒருமணியளவில் குண்டுகள் வெடித்ததினால் அங்குள்ள மூன்று அறைகள் சேதமடைந்தன.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது இந்த மூன்று அறைகளிலும் எவரும் இருக்கவில்லை.

இச்சம்பவத்தின் போது பெண் ஊழியரொருவர் பலியானார்.

ஆறாவது மாடியில் 810, 811, 812 இலக்கங்களைக் கொண்ட அறைகளே குண்டு வெடிப்பினால் சேதமடைந்தன.

இதுதொடர்பாக ஒப்ரோய் ஹோட்டலில் தங்கியிருந்துவிட்டு நேற்றுக்காலை அங்கிருந்து வெளியேறிய நீர்கொழும்பைச் சேர்ந்த ஜோன் செபஸ்தியன் தம்பதிகளைப் பொலிசார் தேடிவருகின்றனர்,

இச்சம்பவம் பற்றி பொலிஸ் ஆணையாளர் நீல்வீரசிங்கா தலைமையிலான பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (வெ)

---

நாவலர் கலாசார மண்டபம்:

## வேலைகள் பூர்த்தியடைந்தும் திறப்புவிழா இல்லை!

### பராமரிக்கும் பொறுப்பை மாநகரசபை ஏற்குமா?

(யாழ்ப்பாணம்)
சுமார் 25 லட்சம் ரூபாசெலவில், யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் கட்டப்பட்ட நாவலர் கலாசார மண்டபத்தின் பராமரிக்கும் பொறுப்பை யாழ். மாநகரசபை ஏற்குமா?

81ம் ஆண்டு இந்து,கலாசார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட இம்மண்டப வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டது.

இம்மண்டபத்தினை பராமரிக்கும் பொறுப்பை நாவலர் சபையிடம் ஒப்படைப்பதென்று முன்பு கூறப்பட்டபோதிலும் தற்போது அது சாத்தியமில்லை என்று அறியப்படுகிறது.

இம்மண்டபத்தின் பராமரிப்புப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று கேள்வி எழுந்துள்ளது.

யாழ். மாநகரசபையிடம் ஒப்படைக்குமாறு சிலர் ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரியவருகிறது. இதுபற்றிய இறுதி முடிவு எடுத்தபின்னரே இம்மண்டபத்தின் திறப்பு விழா நடைபெறுமெனக் கூறப்படுகிறது. (க)

---

## நாகபூஷணி அம்பாளுக்கு தங்கக் குடை!

(வேலணை நிருபர்
இ. சற்குருநாதன்)
வரலாற்றுப் புகழ்மிக்க சைவ ஆலயமான நயினாதீவு நாகபூஷணி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமானபோது பல லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் குடையின்கீழ் நாகபூஷணி அம்பாள் ஆரோக்கணித்து கொடியேற்ற வைபவத்திற்கு வருகை தந்தார்.

இருவருடங்களின் பின்னர் முதல்தடவையாக மகோற்சவம் ஆரம்பித்துள்ளது.

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் உற்சவத்தில் பக்திமயமாகக் கலந்திருக்கப் பல லட்சம் ரூபா பெறுமதிமிக்க தங்கக் குடையின் கீழ் அம்பாள் ஆரோகணித்து வருகை தந்தது மிகவும் பரவசமாக இருந்தது.

அண்மையில் பல லட்சம் ரூபா செலவில் அமைந்த தெற்குவாசல் இராச கோபுர குடமுழுக்கு வைபவமும் இடம்பெற்றது.

ஆலய மகோற்சவ ஒழுங்குகள், சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு, சுகாதாரம், தொண்டர் சேவை ஒழுங்குகளும் விசேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

## பல்கலைக்கழக மாணவர் வகுப்புக்குச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக்காலை வகுப்புகளுக்குச் சென்று [illegible] களுக்குச் சமூகமளித்திருந்தனர்.

கடந்த 10 நாட்களாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. (மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தொட்டிலடி சண்டிலிப்பாயில் 5பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- மல்ரி சேவிசஸ் 37,(351)மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 516

நல்ல நிலையிலுள்ள 2 TV உடன் விற்பனைக்குண்டு. கோல்ஸ்ரார் 17'' B/W பிலிப்ஸ் 17'' B/W. தொடர்பு: B.A சாள்ஸ் No. 3 மருதடிவீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 540

யாழ்நகரில் முன்னணியிலும் நல்ல நிலையிலும் உள்ள அச்சு இயந்திரமும் சகல உபகரணங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல: 562 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 562

இலந்தைக்குளம் வீதி கொழும்புத்துறையில் கடையுடனனு 1½ பரப்புக்காணிஉடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ''மல்ரி சேவிசஸ்'' 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 22762. (554)

24 ஆசனங்கள் கொண்ட ''ROSA'' மினிவான் இரண்டு சிறி தொடர்பிலக்கமுடைய மொறிஸ் காரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 216, 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 566

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பில் உள்ள 38 சிறி தொடர் இலக்க Toyata Hiace வான் விற்பனைக்கு உண்டு. வியாழன், வெள்ளி, சனி நாட்களில் பார்வையிடலாம். தொடர்பு: செ. கிருபைராசா 19, பெரியகடை யாழ்ப்பாணம். 561

Datsun Sunny: வைத்தியர் பாவித்த 11ஸ்ரீ 6000 தொடரிலக்கமுடைய குறைந்த பாவிப்பும் புத்தம் புதிய நிலையிலுமுள்ள கார் விற்பனைக்குண்டு. 46, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 555

## தேவை

தையல் சிமோக்கிங்மெசின் எம்புறோய்டிங் வேலைகளில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பப்படுவர். காரியாலய நேரங்களில் நேரில் வரவும், நவா எம்போறியம் 16, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 539

மரத்தளபாடங்கள் பொலிசிங் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ், 234, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 546

கணக்கியல்துறையில் நீண்டகால அனுபவமுள்ள கணக்காளர் (Book Keeper) விபரங்களுடன் நேரில் வரவும். டில்கா பேணிச்சர் பலஸ் 34, 236, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 547

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஹோட்டலுக்கு மேலைத்தேச சாப்பாட்டுவகைகளும் கீழைத்தேய சாப்பாட்டு வகைகளும் சமைக்கத்தெரிந்த சமையல்காரர் தேவை விண்ணப்பிக்கவும்: 145 பிரதான வீதி யாழ்ப்பாணம். 475

## தேவை

ஒரு வியாபார ஸ்தாபனத்திற்கு பெண் விற்பனையாளர் உடன் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். பாலாஜி ரேட் சென்ரர் 61 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 560

சிறந்த யமுனுபாரி ஆட்டுக்கடா இனவிருத்திக்கு தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீதரன் 38, செட்டி தெரு, நல்லூர். 573

நோயாளி ஒருவருக்கு AB நெகட்டிவ் பிரிவு இரத்தம் உடன்தேவை. தொடர்பு: முருகையா 232 கோவில் வீதி, நல்லூர் தொலைபேசி: 24137 (575)

## கல்வி

G. C. E. (O/L) மாணவருக்கு ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Grammar, English Literature) Radio and T. V. English Lessons, Spoken English தனிப்பட்ட முறையாக ஆரம்பத்திலிருந்து கற்றுக்கொடுக்கப்படும். S. Kumaravelu, Ret: Principal English Mobile Unit Inspector Gurusamy House ஓட்டுமடம் யாழ்ப்பாணம். 269

PHOTO STAT
பிரதிகளுக்கு
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## வகுப்புக்கள்

Pharmacist Course (External) Dr. Gnanapandithan அவர்களால் சனிக்கிழமைகளில் நடைபெறுகின்றன. மீண்டும் ஆரம்பம்30-6-84சனிக்கிழமைகாலை. சு.பாலசுப்பிரமணியம் யாழ். கல்வி நிலையக் கட்டிடம் மேல் மாடி (சாந்தித் தியேட்டர் அருகே) 22, இராமையாச்செட்டியார் ஒழுங்கை யாழ்ப்பாணம். 548

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு டயரியும், ஒரு கணக்குக்கொப்பியும் சேர்ந்த ஒருபார்சல் தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சத்திர சந்தியில் அமைந்துள்ள C. S. K. கட்டிடத்தில் இருக்கின்ற ஹாஜி அப்பாஸ் சன் கடையில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 517

## WANTED

Applications are invited in own hand writing with aptitude in Electronics to be trained in Colombo as Photocopier Technicians for a period of three months. Training fee. of Rs.3,000-00 repayable in three equal instalments as monthly allowances. A deposite of Rs. 2,500-00 also required which is repayable after satisfactory completion of two years service contract. Good prospects - 484, Hospital Road, Jaffna. 549

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## அறிவித்தல்

### நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

இச்சபையின் உபயோகத்திற்கான ராக்ரர் பெட்டி ஒன்று செய்து விநியோகிப்பதற்கான கேள்விகள் 13-07-1984ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் பொருட்டு கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/-ம் விண்ணப்பப்படிவக் கட்டணமாக ரூபா 10/-ம் செலுத்துவதன் பேரில் கேள்வி விண்ணப்பப்படிவம் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை இவ் வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**க. சுப்பிரமணியம்**
செயலாளர்
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
26-06-1984. 567

## பண்டத்தரிப்பு பாடசாலை அபிவிருத்திசங்க நிர்வாகிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வித்தியாலய அதிபர் சங், சகோதரி மேரி சவரினு தலைமையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சங். சகோதரி மேரி சவரினு, உபதலைவர்; திரு சாமுவேல் பெனடிற், செயலாளர்: திரு, என். செபமாலை, உப செயலாளர்: திரு, எம். கே. பத்மநாதன், பொருளாளர்: திருமதி பி. இராசதுரை செயற்குழு உறுப்பினர்களாக 8 பேர் தெரிவாகினர்

## பதவிகள் வெற்றிடம்

1. வர்த்தக முகாமையாளர்:

கல்வித்தகமை:- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுப் பிரமாணப்படி

சம்பளம்: $\frac{350 - 615}{15 \times 7 - 20 \times 8}$

2. வாகன சுத்திகரிப்பாளர் (சேவிஸ் நிலையம்)

கல்வித்தகமை:- 8-ம் வகுப்புச்சித்தி
அங்கீகாரம் பெற்ற சேவிஸ் நிலையத்தில் இரண்டுவருட அனுபவம்.

சம்பளம்:- $\frac{195 - 345}{10 \times 10 - 12.50 \times 4}$

விண்ணப்பப்படிவங்களையும், நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் கேட்டு சொந்த முகவரியிட்ட முத்திரை ஒட்டிய தபால் உறையை அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுதிகதி 15-7-1984**

தலைவர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி,
25. 6. 84. (568)

## வை. எம். சீ. ஏ.

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. தலைவர் பதிவுசெய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தகாரரிடமிருந்து யக்கச்சியில் அறுபத்திஏழு வீடுகளும், கந்தர்மடத்தில் எட்டுவீடுகளும் கட்டுவதற்கான கேள்வி விண்ணப்பங்களை கோருகின்றார். கேள்விகளுக்கான விண்ணப்பப் படிவம் வை. எம். சீ. ஏ. காரியதரிசியிடமிருந்து மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா இருபத்தி ஐந்து செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் படிவம் 1-7-84 திகதி தொடக்கம் 10-7-84 திகதி பிற்பகல் 2 மணிவரை விநியோகம் செய்யப்படும் கேள்வி விண்ணப்பங்களை 24-7-84 பிற்பகல் 2 மணிக்குமுன் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

காரியதரிசி
வை. எம். சீ. ஏ.
யாழ்ப்பாணம்.

571

## ஜே என்ரப்பிரைசஸ்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

சவுதியில்:-

**சாரதிகளும்**
**கூலியாட்களும்**

உடன் தேவை: 3 கிழமைகளுக்குள் அனுப்பப்படும்.

பாஸ்போட், சமயச்சான்றிதழ், பாஸ்போட்டில் உள்ள படம் 6 என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

**T துரைசிங்கம்**
மல்வம்,
(உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்)
உடுவில், சுன்னாகம்.

விண்ணப்டம் இன்றிலிருந்து பாரம் எடுக்கப்படும்.

Labour Licence No: 426.
No: M/ D/ A 12627

550

## ஓராண்டு நினைவஞ்சலி

நயினாதீவு

**திருமதி வள்ளியம்மை இராமநாதன்**

தோற்றம்: 5-09-1903 மறைவு: 11-06-1983



எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களைப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. தங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

569 மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
3-ம் வட்டாரம், நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப்பில் அமைதியை ஏற்படுத்த

# அனைத்து மக்களும் ஒன்றுபடவேண்டும்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கோரிக்கை

(சென்னை)

பஞ்சாப்பில் அமைதியை ஏற்படுத்த அனைத்து மக்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் திரு.நீலம் ரெட்டி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோயம்புத்தூரில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் சமுதாய ஒற்றுமை ஆகியவற்றைக் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## தொழில் முன்னிலைக் கல்வி

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முக்கிய பாடசாலைகளில் தொழில் முன்னிலைக் கல்வி, நுண்கலைக் கல்வி, மனையியற் கல்வி ஆகியவற்றினை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி தனியான கல்வி வட்டாரமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து இவ்வாறான துறைகள் விருத்தி செய்யப்படவுள்ளன.

# குடிமக்கள் வாழும் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலில்லை!

## ஈரான்—ஈராக் இணக்கம்

டமஸ்கஸ், ஜூன் 27

குடிமக்கள் வாழும் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்துவதில்லை என்று ஈரானும் ஈராக்கும் ஒத்துக்கொண்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்த யுத்தத்தில் இவ்வாறான உடன்படிக்கை ஒன்றுக்கு இரண்டு நாடுகளும் வந்தது இதுவே முதல்தடவையாகும்.

ஐ.நா. பொதுச் செயலாளர் திரு. ஜாவியர் பெரல் டிகுவெல்லரின் வேண்டுகோளின் பேரில் குடிமக்கள் வாழும் பகுதியில் குண்டு வீசுவதில்லையென்று ஈராக்கும் ஈரானும் சம்மதித்துள்ளன.

ஈரான் - ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பும் பல நாடுகள் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளஅதே வேளையில், யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுக்கள் தொடங்கப்படல்வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

## தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி தமிழ்நாடெங்கும் ஊர்வலம்

## இ. காங்கிரஸ் ஏற்பாடு!

(சென்னை)

தேசிய ஒருமைப்பாட்டையும் வகுப்பு ஒற்றுமையையும் வற்புறுத்தி இந்திரா காங்கிரஸ் ஏற்பாடுசெய்திருந்த வைபவங்கள் தமிழ் நாடெங்கும் நடைபெற்றன.

தமிழ்நாடெங்கும் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் ஆங்காங்கே நடைபெற்றன.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் ஏற்பாடுசெய்த ஊர்வலம் காமராஜ் சிலையிலிருந்து ஆரம்பமாகி தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தை வந்தடைந்தது. தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் திண்டிவனம் கே. ராமமூர்த்தி ஆகியோர் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

கோவை இ. காங்கிரஸ் ஏற்பாடுசெய்திருந்த பொதுக் கூட்டத்தில் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

## உலக கிரிக்கெட் வீரர்களில் சிறந்த 'ஓல்றவுண்டர்' யார்?

### செப்டம்பரில் லண்டனில் போட்டி

(லண்டன்)

உலகின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான போட்டியொன்று செப்டம்பர் மாதம் லண்டனில் நடைபெறவிருக்கிறது.

12 ஆயிரம் டொலர் பரிசு கொண்ட இப்போட்டியில் உலகின் சிறநத சகலதுறை ஆட்டக்காரராகத் தெரிவுசெய்யப்படுபவருக்கு இப்பரிசு வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்து வீரர் இயன் பொத்தாம், இந்திய வீரர் கபில்தேவ், நியூஸிலாந்து வீரர் றிச்சர்ட் ஹட்லி, மேற்கிந்திய வீரர் மல்கம் மார்ஷல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## தடியூன்றி நடப்பவர் லொறிக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

லொறி ஒன்று பின்னோக்கி வந்தபோது பின்னால் நின்ற கால் வழங்க முடியாது தடி ஊன்றி நடப்பவர் பலியானார்.

கோண்டாவிலைச் சேர்ந்த சின்னவன் வேலன் என்பவரே மரணமானவராகும்.

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

இம்மாதம் 20ம் தேதி நடந்த இவ் விபத்தின் போது அருகே நின்ற மரக்கறி விற்கும் பெண் ஒருவர் கத்தியதாகவும், லொறி நிறுத்தப்பட்டு கீழே பார்த்தபோது, அவர் காயமெதுவுமின்றி கிடந்ததாகவும், பின் அதே லொறியில் ஏற்றிக் கொண்டு போய் கிராம அபிவிருத்திச் சங்க நூல் நிலையமொன்றில் கிடத்திவிட்டு சென்றதாக விசாரணையில் கூறப்பட்டது.

21ம் தேதி காலை, அப்பகுதி இளைஞர்கள் அவரை யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், அங்கு மரணமானதாகவும் அன்று நூல் நிலைய சுவரில் அந்த லொறியின் இலக்கத்தை ஒரு இளைஞர் எழுதிவைத்திருந்ததாகவும் கூறப்பட்டது.

லொறிச் சாரதியான ரகுநாதன் இளமுருகன், மரண விசாரணை அதிகாரி முன் சரணடைந்தார்.

இ. திரவியம், கே. பாலசிங்கம் ஆகியோர் மரணவிசாரணையில் சாட்சியமளித்தனர்.

சாரதியை இம்மாதம் 27ம் தேதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டு, பிரேத பரிசோதனை செய்யுமாறு பணித்து விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## பெண்ணுக்கு——

## ரூ. 2 ஆயிரம் அபராதம்! 6 மாத ஒத்திவைப்புச் சிறை!!

(யாழ்ப்பாணம்)

192 கிராம் வடிசாராய கோடாவும், உபகரணங்களும் வைத்திருந்ததாக குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த த. தங்கம்மாவிற்கு 2000 ரூபா அபராதமும், 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச்சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

96 கிராம் வடிசாராயத்தை வைத்திருந்ததாக, கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னர் முத்துலிங்கம் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், 1000 ரூபா அபராதமும், 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (க)


## பொதுமக்களுக்கோர் நற்செய்தி!

# கமற் ரான்ஸ்போட் லிமிட்.

## (GAMET TRANSPORT LTD)

### யாழ் / கொழும்பு உல்லாச பஸ் சேவை.

* குளிரூட்டப்பட்ட உறங்கல் இருக்கைகள்
* சௌகரியமான பயணம் வாய்ப்பை இழக்காதீர்கள்! முன்கூட்டியே ஆசனங்களை பதிவு செய்துகொள்ளுங்கள்.

கட்டணம்: ஒரு வழி ரூ. 100/-

புறப்படும் இடங்கள்:

கொழும்பு:
6-30 பி. ப. வெள்ளவத்தை வர்த்தகவங்கி முன்பாக
6-45 பி. ப. கிறீன்லன்ட் ஹோட்டல்
7-00 பி. ப. கோட்டை புகையிரதநிலையம்
7-15 பி. ப. கோமதி விலாஸ், செட்டித்தெரு

யாழ்ப்பாணம்:
6-00 பி.ப. காங்கேசன்துறை
7-00 பி.ப. மாக்பெட் பெற்றோல் நிலையம்(MARKFED) ஸ்ரான்லி றேட், (லிடோ படமாளிகைக்கு முன்பாக)

கீழ்க்காணும் இடங்களில் ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்:

யாழ்ப்பாணம்:

1, கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ், இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23875 - 22784
2. நியு. வி. எஸ். எஸ். கே. இல, 348, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:24020
3, மினிரேட் சென்ரர், இல. 3, ஜே. எம். சி. கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24331
4. கிருஷ்ணாஸ், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை.

கொழும்பு:

1. GRANDMET CEYLON LTD. (ஹோட்டல் கிறீன்லன்ஸிற்கு அருகாமையில்) இல. 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 85832 — 580054
2. காந்தி லொட்ஜ், இல. 200, காலி வீதி, வெள்ளவத்தை. தொலைபேசி: 82720
3. கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட், இல. 34, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி. தொலைபேசி: 81986 and 85592
4. கோமதி விலாஸ் இல. 142, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 34144
5. அஜந்தா ஹோட்டல் லிமிட்டெட், 125, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை, கொழும்பு-11, தொலைபேசி: 28089

காரியாலயம்: **Grandmet Ceylon Ltd.**
கொழும்பு: 35 A, சிறிபெரி காடின்ஸ், பம்பலப்பிட்டி- தொலைபேசி: 85832 — 580054

யாழ்ப்பாணம்: **Greenfield Travel Operators**
கிறீன்பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ். இல. 26, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23875 — 22784


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நன்மைக்குத்தீமை செய்தல் பிசாசின் குணமாகும்
தீமைக்குத் தீமை செய்தல் மிருகத்தின் குணமாகும்
நன்மைக்கு நன்மை செய்தல் மனிதனின் குணமாகும்
தீமைக்கு நன்மை செய்தல் இறைவனின் குணமாகும்

— ஒருபெரியவர்

# இந்துபோர்ட் இராசரத்தினம் நூற்றுண்டு: ஜனன தினமான 4-ம் திகதி எழுச்சி விழா கொண்டாடுக!

## யாழ். சைவப்பாதுகாப்புச் சேவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நாவலர் அடிச்சுவட்டிலே சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமகனுர் இந்து போர்ட் இராசரத்தினம் ஜனன நூற்றுண்டு எதிர்வரும் 4-ம் திகதி புதன்கிழமை வருகின்றது.

இதனைமுன்னிட்டு இராசரத்தினம் நினைவு எழுச்சி விழாக்களைக் கொண்டாடும் வண்ணம் யாழ்ப்பாணம் சைவப் பாதுகாப்புச் சேவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வேண்டுகோளைப் பிரபல கல்லூரிகள், வித்தியாசாலைகள், சங்கங்கள் வரவேற்று விழா எடுக்க முன்வந்துள்ளன.

இந்துபோர்ட் எனக் கூறப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கமூலம் இருநூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளைக் கிராமங்களின் மூலைமுடுக்கெல்லாம் நிறுவத் தம்மையே அர்ப்பணித்த பெருந்தகை இரரசரத்தினமாவர். ஆயிரத்திற்கு மேற்பட்ட சைவ ஆசிரியர்களை உருவாக்கி இலங்கை எங்கும் நாவலர் அடிச்சுவட்டிலே பணியாற்ற வகை செய்தவர் இவரே.

''இன்று பிரதித்திபெற்று விளங்கும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்தம் ஞானகுரு உப அதிபர் திரு. பொ. கைலாசபதி ஆகியோரின் திறமையைக் கண்டு முழுமையாகப் பயன்படுத்தியவர் உயர் திரு. இராசரத்தினமாவர்.

''அன்னுர் உயிருடன் வாழும்பொழுது எவ்வித பாராட்டு விழாக்களையோ, பட்டங்களையோ ஏற்காது போற்றலையும் தூற்றலையும் ஒன்ருகக் கருதிப் பணியாற்றினுர். இதனுல் சிவயோக சுவாமிகள் உள்ளிட்ட மெய்ஞானி ''நாவலர்க்குப் பின் இராசரத்தினமே'' எனக்கூறலாயினர்.

''எத்தனையோ வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தும் தமது பெயரை நினைவுபடுத்த அன்று முயலாத பெருந்தகையின் பெயரை மறப்போமாயின் அவர்காட்டிய வழியை விலகிச் சென்றுவிடுவோம் என்பதற்காக அன்னுர் விழாவைச் சிறப்பாக நடாத்தவேண்டும் என சைவப் பாதுகாப்புச் சேவை இயக்குனர் திரு. க. கணபதிப்பிள்ளைவேண்டுகோள் விடுத்துள்ளார்

# நமது நோக்கு

## ஜனநாயகங்கள்: மேற்கிலும் கிழக்கிலும்

''ஒரு நாட்டை மற்றொரு நாடு அடிமைப்படுத்துவதைப் போன்ற கொடுமை உலகத்தில் வேறு எதுவும் கிடையாது. பெரிய வல்லரசுகள் சிறிய நாடுகளின் சுதந்திரத்தில் தலையிடுவதை நிறுத்தும் வரையில் உலகில் அமைதி ஏற்படாது''

இது ஜனநாயகதிற்கு வரை விலக்கணம் வழங்கிய ஆபிரகாம் லிங்கனின் கருத்து; சிறுநாடுகள் பெரிய வல்லரசுகளை நாடித் தங்கள் ஆட்சிக்கு ஆதரவு தேடுவதும் அமைதிக்குப் பங்கமென நாம் கொள்கிருேம்.

பாரத தேசத்துக்கு விஜயம் செய்பவர்கள் டில்லியின் 'ராஜ்காட்' என்ற புனித இடத்தில் உள்ள மகாத்மா காந்தி சமாதிக்கு அஞ்சலி செலுத்துவது எத்துணை முக்கியமோ அது போன்றதே வாஷிங்டனில் உள்ள லிங்கன் நினைவுச்சிலை (Lincoln Memorial)க்கு தினசரி படையெடுக்கும் ஆபிரக்கணக்காண யாத்திரிகர்கள்.

இலங்கை ஜனுதிபதி ஜெயவர்த்தனு இதனைப் பார்த்து பரவசடைந்திருப்பாரென்பது நிச்சயம். இலங்கை ஜனநாயகம் பற்றி அவர் விசனமடைந்திருக்கும் இவ்வேளையில் லிங்கனின் மணிவாக்கு பெரும் உற்சாகமளிக்கவல்லது.

எங்கள் பத்திரிகைகள் இவ்வித கருத்தை மதிக்கும் மரபைப் பேணத் தவறுவதால் வாசகர்கள் சிறு விடயங்களில் கவனத்தைச் செலுத்தி பெருநோக்குகளை அலட்சியம் செய்கின்றேம்.

இருநூறு ஆண்டு பூர்த்தி செய்த ஜனநாயக அமெரிக்காவிற்கு இன்று உலகத்தின் தலைமை ஏற்பட்டிருப்பதை நாம் உற்றுநோக்கவேண்டும்.

எங்களைப்போல ஆங்கிலேயர் ஆட்சியில் சிக்குண்டு சுதந்திரத்துக்காக இரத்தம் சிந்தி உருவான சுதந்திர அமெரிக்கா தனிமனிதனின் சுதந்திரத்தையும்தேசத்தின் கெளரவத்தையும் பாதுகாக்கமக்கள் தம்மை அர்ப்பணிக்கும் மரபை நிரந்தரமாக்கிவிட்டது.

'மிஸ்டர் பிறசிடென்ற்' (Mr. President) என்று ஜனுதிபதியை அமெரிக்க மக்கள் அழைக்கும் வழக்கம் இதனை நிரூபிக்கின்றது. இன்று நாட்டின் ஜனுதிபதியாகத் தெரிந்தெடுக்கப்படுபவர் மக்கள் ஆதரவினுல் தலைமைத்துவம் பெறுகின்ருர். ஆட்சிக்காலத்தில் முடிசூடா மன்னர்போன்ற அதிகாரம் பெற்றிருக்கிருர்.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர் அப்பதவியை நினைக்க முடியாதென்ற நம்பிக்கையை முறியடித்தவர் ஜனுதிபதி கெனடி. மரவீட்டிலிருந்து வெள்ளை மாளிக்கைகுள்ளிட்டவர் லிங்கன். இன்று பணம், செல்வாக்கு பெருமிடம் வகித்தாலும் சாதாரண மனிதன் தனது திறமையாலும் தொண்டாலும் நாட்டின் தலைவராக உயரலாம். கறுப்பர் ஒருவரை உபஜனுதிபதியாக்க இன்று முயற்சிகள் நடைபெறுவது இதற்கு சான்ருகும்.

வெள்ளை மாளிகையில் கூடிக்குலாவியிருந்த ஜனுதிபதிகள் றீகனும் ஜெயவர்த்தனுவும் இவ்விரு நாடுகளும் பொன்னெனப் போற்றும் ஜனநாயகம்பற்றி மனம் விட்டுப் பேசியிருப்பார்கள்.

எமக்குக் கிடைக்கும் செய்தி சர்வதேச பயங்கர வாதம்பற்றியே! சில இலங்கைத்தமிழர் அச்சமயத்தில் ஏதும் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கலாம், அதற்கு நியாயமுண்டு; அதனைப் பிரபலப்படுத்தும் செயல், அந்நாட்டில் ஜனநாயம் துள்ளி விளையாடுகிறதென்பதை விளக்குகிறது.

இங்கிலாந்தின் ஜனநாயகம் பழம்பெருமை வாய்ந்தது; படிப்படியாக, மன்னன் ஆதிக்கத்தின் அட்டூழியங்களை ஒழித்து மக்கள் ஆட்சியை நல்லஅத்திபாரத்தில் நிறுவிய வரலாறு உள்ளத்தைக்கவரும் இதிகாசம்.

முடியாட்சியை முற்ருக ஒழித்த போதும் மன்னர் பரம்பரை பேணப்படவேண்டுமென்ற பண்பு ஆங்கில ஜனநாயகத்துக்கு அசாதாரண அழகு ஊட்டுகின்றது; அவர்கள் விரும்பி விளையாடும் கிரிக்கட் அதற்கு உறுதுணையாக உள்ளது.

இரண்டாவது மகாராணி எலிஸபெத் அண்மையில் ஜனுதிபதி றீகனை மதிய போசனத்திற்கு அழைத்தபோது ஜனுதிபதியின் படக்காரன் அங்கு வருவதை விரும்பவில்லையென்ருல் ஜனநாயகத்தின் நுட்பமான கருத்துக்கள் சிந்தனைக்குரியவை.

அமெரிக்க ஜனநாயகத்திற்கு காவல் நாய் திருவாளர் பொதுஜன அபிப்பிராயம். இவரின் தினசரி ஆரோக்கியத்தைக் காட்டும் வெப்பமானி அமெரிக்க தினசரிப் பத்திரிகைகள். வெட்டு ஒன்ருனுல், விழுவது இரண்டு துண்டுகள்.

இங்கிலாந்தின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது பாராளுமன்றம்: அதனைத் திசைதிருப்ப எவராலும் முடியாது; எந்த வணங்கா முடியனையும் அது வீழ்த்திவிடும். செத்தைக்குள் இருக்கும் எவரையும் மெத்தைக்குக் கொண்டுவர வல்லது. ஆட்சித் தலைவராக திருமதி தட்சர் நிமிர்ந்தகதை இதனை மிகச் சுவையுடன் விளக்கும்.

இன்று ஜனுதிபதி ஜெயவர்த்தனு, ஆங்கில ஜனநாயகத்தின் இரு பெரும் தூண்களானமகாராணியையும் பிரிட்டிஷ் பிரதமர் தட்சரையும் சந்தித்து கருத்துப் பரிமாறியிருக்கிருர்.

அமெரிக்க, ஆங்கில ஜனநாயகங்களை நேரில் தரிசித்து அனுபவித்த ஜனுதிபதி ஜெயவர்த்தனுவிற்கு இலங்கை ஜனநாயகம் பற்றிய கவலை இங்குள்ள வடபகுதி 'பயங்கரவாதத்தைப் பற்றியே!' ''ஒரு தமிழர் ஜனுதிபதியாகவும் வரலாமென்ற வசதியிருந்தும்'' இந்தத் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டிருப்பது அவருக்கு கவலை அளிக்கிறது.

இலங்கையைப் போல் பாராளுமன்ற ஆட்சி முறையைப்பேணும் எங்கள் அண்டை நாடாகிய இந்தியா கவலை கொண்ட ஜனுதிபதியை அழைத்திருக்கிறது. இந்திய ஜனநாயகம் (காந்தி-நேரு) நிச்சயம் இத்துயரைத் துடைக்க வேண்டும், துடைக்க முடியும்.

# 'இருமடங்கு ஒத்துழைப்பை சகலமட்டத்திலும் பெற்றேன்'

## பிரிந்துசெல்லும் அரசாங்க அதிபர் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மக்களிடமிருந்தும், ஊழியர்களிடமிருந்தும் இருமடங்கு ஒத்துழைப்பை சகல மட்டத்திலும் நான் பெற்றேன்'' என்று திரு தேவநேசன் நேசையா கூறினுர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகவும், கடந்த மூன்றரை வருடம் கடமையாற்றி புலமைப்பரிசில் பெற்று இன்று அமெரிக்கா செல்லும் திரு தேவநேசன் நேசையாவுக்கு 'யாழ். பீச் . இன்' ஹோட்டலில் இறுதி விருந்துபசாரம் நடந்தது.

டாக்டர் ஜே.பி.பிலிப் தலைமையில் யாழ். நலன் விரும்பிகளால் நடாத்தப்பட்ட இவ்வுபசார வைபவத்தில் மேல் நீதிமன்ற, நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள், வைத்தியகலாநிதிகள், மேலதிகஉதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள், எழுத்தாளர்கள், மாவட்ட சபை, மாநகரசபை முன்னுள் உறுப்பினர்கள், மதகுருமார் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு.பி.விஜயக்கோன், கோப்பாய்த் தொகுதி முன்னுள் எம்.பி திரு ஆ.மு. ஆலாலசுந்தரம், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி வாழ்த்துப்பாடினுர். இவ் வாழ்த்துப் பாமாலையை கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை எழுதியிருந்தார்.

திரு தேவநேசன் நேசையா தமக்களிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், பலகஷ்ட துன்பங்களுக்கும் மத்தியில் சந்தோஷமாக இருந்ததற்குக்காரணம்சகலதரப்பிலும் கிடைத்த அமோக ஒத்துழைப்புத்தான்' என்ருர். இவ் ஒத்துழைப்புக் கிடைக்காமலிருந்தால் கடந்த மூன்றரை வருஷகாலமாக அரசாங்க அதிபராகக் கடமையாற்றியிருக்க முடியாதென்றும் அவர் சொன்னுர்.

பேராசிரியர் வித்தியானந்தன் பேசுகையில், யாழ். பல்கலைக்கழக ஆளுநர் சபையில் திரு தேவநேசன் நேசையா இருந்த படியால் பல்கலைக்கழகத்தில் தோன்றிய பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிகள் எடுத்திருந்தார் என்ருர். இதற்குப் பேராசிரியர் நன்றி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அமைச்சர் திரு விஜயக்கோன் பேசுகையில், திரு தேவநேசன் நேசையாவின் சேவைகளையும், திருமதி தேவநேசன் செஞ்சிலுவை சங்க மூலம் ஆற்றிய சேவைகளையும் பாராட்டினுர்.

(8ம் பக்கம் பார்க்க)

### நல்லூர் வெட்டுக்குளம்

# புவனேஸ்வரி அம்பாள் வருடாந்த உற்சவம்

இம்மாதம் ஆனி 29ம் திகதி திருவாதிரை நட்சத்திரத்தில் அரியாலை நல்லூர் வெட்டுக்குளம் அருள் சொரியும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது.

புவனத்தைக்காத்து சரிபாதியாகி நின்றிடும் சிவனுடன் கூடிய 'சக்தி' புவனேஸ்வரி என்கிருள். இவள் எழுந்தருளியுள்ள வெட்டுக்குளம் ஆலயம் நட்டுநடுவாகஅமைந்து இருக்க இதன்வடக்குத்திசையில் வெய்யிலுகர்ந்த பிள்ளையாரும், அடுத்து நாயன்மார்கட்டு, பிள்ளையார் கோவிலும், தெற்குத்திசையில் இலந்தைக்குளம் பிள்ளையார் ஆலயமும் அடுத்து ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலும் அமைய எழுந்தருளி இருக்கின்ருர்.

இவ்வாலயங்களின் திருக்குளங்களிள் இன்றும் தூர்ந்து போகா நிலையில் உள்ளது நாயன்மார்கட்டு பிள்ளையார் குளமேயாம் என அறிவோம். அயலவர்களைக் காக்கும் காவல் தெய்வமாக மிக ஆதியில் அடியவர்களால் வழிபாடு செய்யப்பட்டுவந்த 'நாச்சி அம்மன்' பிற்காலத்தே நாற்புற மக்களுக்கும் நன்மை பயக்க அருள் சொரியும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆகினுள்.

இவ்வம்பாள் ஆலயத்திலே அதிசய மரமொன்றுகாண்பீர்! நாற்பது அடிகளுக்குமேற்பட்ட சுற்றளவுகொண்டு நீண்டுஓங்கி வளர்ந்து ஆலய பலிபீட மூலஸ்தானங்களைத் தன் குடை நிழலில் அடக்கி நின்றிடும் ஆதி மூல மரமாக 'இத்தி' நிற்கின்றது. இதன்மேல் அரசு வேம்பு இன்னும்பல இனமரங்கள் வேரூன்றி வளர்ந்து நிற்கின்றன. இவ் 'இத்தி' மரம் சுமார் முன்னூறுவருட பழமை வாய்ந்ததாகும்.

**ஐ. சண்முகலிங்கம்**

இவ்'இத்தி' மரத்தின் கீழ்வீடு கொண்டெழுந்தருளி உள்ள அம்பாள்மேல் அருட்பாக்கள் பல கவிஞர்களினுல் யாத்துப் பாடப்பட்டுள்ளன.

இருமுறைகளுக்கு முன்பாக இவ்வாலய புனர்நிர்மாண வேலைகள் இவ்விடத்தேவசித்த பெரியார் ஆண்டி சின்னன் என்பவரால் அம்பாள் கனவில் தோன்றி விடுத்த கட்டளையின் பிரகாரம் ஆரம்பித்துவைக்கப் பட்டதாம். இன்று இவ்வாலயம் மணிக்கோபுரம் உட்பட சைவாகம விதிமுறைகளுக்கமைய பொலிவு பெற்றிருந்தாலும் இவ்வாலய ஆதி உற்பத்திக்காலத்தில் இதனைப்பராமரித்துவந்த பரம்பரையின் வழித்தோன்றலான பெரியார் வல்லிபுரம் சின்னப்புவின் விடாமுயற்சியினுல் திருப்பணி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐரோப்பாவிலும் பிரிட்டனிலும் செயல்படும் ஐக்கிய தேசியக்கட்சிப்பிரமுகர்களுடன் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன காணப்படுகின்றுர். லண்டன் கிளாறிட் ஐஸ் ஒட்டலில் நடந்த விருந்துபசாரத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

# கற்கோவளம் கொலே: 1-ம் எதிரி பிணையில் அனுமதி

(புலோலி)

கற்கோவளம் கமலதாஸ் கொலேயின் முதலாம் சந்தேக நபர் மேல் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 5,000 ரூபா பிணையில் விடப்பட்டார். ஏனைய நான்கு சந்தேக நபர்களும் தொடர்ந்துறிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கற்கோவளத்தைச் சேர்ந்த கமலதாஸ் (துரைமணி) என்பவரைக்கோடரி, கத்தி போன்ற ஆயுதங்களினுல் தாக்கிக்கொலே செய்ததாக சந்தேகத்தின் பேரில் கற்கோவளத்தைச் சேர்ந்த கே. அருளானந்தம், கே. சிதம்பரப்பிள்ளே, கே. குணரத்தினம், கே. தயாளரூபன், கே. தயாளமோகன் ஆகியோரைப்பொலிசார் தேடி வந்தனர். இச்சந்தேகநபர்கள் பொலிசில் சரணடைந்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளே முன்னிலேயில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில் முதலாம் சந்தேக நபரான ஆயுள்வேத வைத்தியர் கே. அருளானந்தத்தைப்பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா, சட்டத்தரணி கே. முத்துக்குமாரு ஆகியோர் யாழ் மேல் நீதிமன்றத்தில் பிணேமனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் இப்பிணேமனு மீதான விசாரணேகளே மேற்கொண்டு இம்முதலாம் சந்தேகநபரை 5,000 ரூபா பிணேயில் செல்ல அனுமதி வழங்கியதுடன், இரண்டு கிழமைக்கொருமுறை பொலிஸ் நிலேயம்சென்றுகையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தார்.

இதனேத் தொடர்ந்து முதலாம் சந்தேக நபரான அருளானந்தம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. கணபதிப்பிள்ளே முன்னிலேயில் ஆஜர் செய்யப்பட்டு பிணேயில் விடப்பட்டார்.

# முத்துஐயன்கட்டு விவசாயிகள் கஷ்டநிலே!

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டு விவசாயிகள், இவ்வாண்டு உப உணவுச் செய்கையில் சின்ன வெங்காயம், மிளகாய், உழுந்து, பயறு கச்சான் ஒருசதவீதம் கூட பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவில்லே. சென்ற ஆண்டு மழை கூடுதலாக பெய்ததே இதற்குக் காரணமாகும்.

வடபகுதிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியால் மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களின் விலே உச்சநிலே அடைந்துள்ளது.

இப்பகுதி குடியேற்ற வாசிகள் மாற்று நடவடிக்கை காரணமாக இடைப்போக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பயிர்ச் செய்கையில் புழுவின் தாக்கத்தினுல் நெல்வேளாண்மை தாக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மேலும் மேலும் கஸ்ட நிலேயையே அடைகின்றனர் என முத்துஐயன்கட்டு திட்ட முகாமையாளர் விவசாயிகளின் கூட்டத்தில் கவலே தெரிவித்தார்.


குரேஸ் ட்ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட்
(CROSS TRAVEL SERVICES (Pte) LTD.)
ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை :-

குரேஸ் சர்வதேச தொலேத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குரேஸ் சர்வதேச தொலேத்தொடர்பு சேவை :
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலேத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலேத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C.T.S)


# கொழும்பு மணிவிழாவில் 'வித்திக்கு' சிங்கள, முஸ்லிம் அறிஞர் புகழாரம்

(இ. கந்தசாமி)

"தமிழுக்கும் தமிழ்க் கலே, கலாசாரத்திற்கும் அளப்பரிய சேவையாற்றிய மணிவிழாக்கண்ட பேராசிரியர் வித்திக்கு இலங்கை முழுவதுமே விழா எடுக்கவேண்டும்.

''பூஜைக்குரியவர்கள் பூஜிக்கப்படவேண்டும்; கௌரவத்திற்குரியவர்கள் கௌரவிக்கப்படவேண்டுமென'' புத்தபிரானே கூறியிருக்கிருர்.

''அந்த ரீதியில் உலக நாடுகளேச் சேர்ந்த சான்றேர்களே விட எதுவிதத்திலும் குறைவில்லாத 'வித்தி'க்கு நாடுமுழுவதும் விழா எடுப்பது சாலவும் பொருந்தும்.''

சிங்களப் பெருமகன் ஒருவரின் பேரவா இது.

வடக்கில் (மணி) விழா எடுத்துக் கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் வித்திக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கமும் கல்ஹின்னே தமிழ்ச் சங்கமும் இணைந்து தலேநகரில் விழாவெடுத்தன.

இவ்விழாவில் உரையாற்றிய கலாசாரத் திணேக்களப் பிரதிப் பணிப்பாளர் திரு. கே.ஜி. அமரதாச மேற்கண்ட தமது ஆவலேத் தெரிவித்ததோடு, 'வித்தி'க்கு யாழ். நகரில்நடைபெற்ற மணிவிழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றமையினுல், மனமிருந்தும் அங்குள்ள சூழ்நிலே காரணமாக அங்குசென்று அதில் பங்குபற்ற முடியவில்லேயென்றும், தலேநகரில் இவ்விழா இடம்பெறுவதும் தம்மைப்போன்றவர்களுக்குப் பெருமகிழ்ச்சியளிப்பதாகவும் கூறினுர்.

பேராசிரியர் 'வித்தி' போன்றேர் யுகத்திற்கு யுகம்தான் தோன்றுகிறுர்கள் என்றும்கூறி 'வித்தி'க்கு யுகபுருஷர் என்ற பட்டத்தையும் சூட்டினுர் அமரதாச.

கொற்றொழில் வீதியில் தாம் ஊசிவிற்க விரும்பவில்லே என்ற பீடிகையுடன் தமது உரையை ஆரம்பித்த பிரதேச அபிவிருத்தி அமைச்சைச் சேர்ந்த டி. டி. நாணயக்கார, நாவலர், கணேசையர், விபுலாநந்தர், குமாரசாமிப் புலவர், பண்டிதமணி கணபதிப்பிள்ளே ஆகியோர் வழியில் தமிழுக்கு அரும்பெரும் சேவையாற்றிவரும் 'வித்தி'க்கு ஆண்டவன் நீண்ட ஆயுளேக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

இருவருமே கொச்சைத் தமிழிலேதான் பேசினுலும் அழகு தமிழில் வார்த்தைகள் வெறுமனே உதட்டிலிருந்து அல்லாமல் உள்ளத்திலிருந்து வெளி வந்ததை அவர்கள் மகிழ்ச்சி ததும்பிய முகம் எடுத்துக்கூறியது.

வித்தைக்கு ஆனந்தனுன வித்தியானந்தனிடம் கலேமகள் குடிகொண்டிருக்கிருள். தாம் கற்ற விடயங்கள் தம்முடனேயே மடியவேண்டும் என்ற எண்ணம் கொண்ட பலர் வாழும் இக்காலத்தில் பேராசிரியர் 'வித்தி', எமது எதிர்கால சந்ததியினருக்கென ப் பல நூல்களே எழுதியுள்ளார்.

—முன்னுள் உயர் நீதிமன்ற நீதியரசரும் சட்டப் பேராசிரியருமான கலாநிதி எச். டபிள்யூ. தம்பையாவின் சமர்ப்பணம் இது.

'வித்தி'யின் மூத்த மாணவிகளில் ஒருத்தி என்று தம்மை அறிமுகப்படுத்திப் பெருமையடித்தவாறே உரையாற்றிய ரூபவாஹினி கூட்டுத்தாபனப் பணிப்பாளர் திருமதி ஞானம் இரத்தினம்.

நாட்டுக் கூத்துக்கும் நாடகத்துறைக்கும் வித்தி ஆற்றிய சேவைகளுக்கு புகழாரம் சூட்டினுர்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கும் வித்தி நாவலர், விபுலாநந்தர் வழியில் தமிழுக்காக சேவையாற்றி வருகிருர். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஆலமரமாக இருக்கும் வித்தியின் காலத்தில் தமிழ் இனத்தின் மத்தியில் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும்.

வித்தியின் மற்ருெரு மாணவனும் நெருங்கிய நண்பனுமான வீரகேசரி ஆசிரியர் திரு. எஸ், சிவநேசச் செல்வனின் விருப்பம்,

வித்தியைப் போன்று முஸ்லிம் மக்களின் உள்ளத்தில் அழியாத இடத்தைப் பிடித்துள்ள வேறு தமிழ்த் தலேவர்களே இல்லே என்று கூறுமளவுக்கு 'வித்தி' முஸ்லிம்கள் மத்தியில் புகழ் பெற்றுள்ளார் என்று கூறினுர் மதுரை காமராஜ் பல்கலேக்கழகப் பேராசிரியர் கலாநிதி எம். எம். உவைஸ்,

தமிழாராய்ச்சி மகாநாடுகள் பற்றி எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக அவற்றை வித்தி நூலுருவில் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் பேராதனேப் பல்கலேக்கழக விரிவுரையாளர் கலாநிதி பொ. பூலோகசிங்கம்.

தமிழுக்கு - தமிழ் மக்களுக்கு - கலேக்கு - கலாச்சாரத்திற்கு பல்லாண்டு காலம் ஆற்றிய அளப்பரிய சேவையினுல் ஏற்பட்ட பூரிப்பு - பெருமிதம் திருப்தி இவையெல்லாம் அன்

[8-ம் பக்கம் பார்க்க]

## பிறந்ததின வாழ்த்து

மதுரா இராஜரட்ணம்



கோப்பாய் தெற்கு கட்டப்பிராயைச் சேர்ந்த இராஜரட்ணம் சரோஜினிதேவி தம்பதிகளின் புதல்வி மதுரா தனது 5-வது பிறந்தினத்தை இன்று (29-06-84) குதூகலமாகக் கொண்டாடுகின்றுர். இவரை அப்பா, அம்மா, அக்காமார், அம்மம்மா, பாட்டா, காந்தன், மாமா குடும்பத்தினர், ஜெனி, துர்க்கா, பவா சித்தப்பா, சித்தி [பிரான்ஸ்], ஜெயா, சித்தப்பா, சித்தி [பிரான்ஸ்], விஜயா சித்தி, குமார்மாமா [இத்தாலி], கப்பல் மாமா, ஸ்ரீகண்ணு சித்தி, பெரியப்பா [சவுதி] ஆனந்மாமா [சவுதி] மற்றும் உற்றுர் உறவினர்கள் வாழ்த்துகின்றுர்கள்.

[579]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய வானொலியில்

5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்கள்-தருமபுரம் பி. சுவாமிநாதன்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
7-00 தலைமை நீ வணங்காய் -கோண்டாவில் ஆசிமட அரசடிவிநாயகர் ஆலயம
7-30 மாகாணச் செய்திகள்
7-35 நாதஸ்வரம் - மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள்
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு.
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
6-35 ஞானமிர்தம்
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-00 உலகச் செய்திகள்
8-10 களத்துமேடு
8-25 இல்லறஜோதி
8-40 நாட்டுப்பாடல்
8-45 பேச்சு - ''சமூகத்தில் குற்றவாளிகளின் நிலை'' R. சிவகுருநாதன்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் —வாத்தியஇசை
9-30 மெல்லிசைப்பாடல்
9-45 தாளவாத்தியக் கச்சேரி-அகில இந்திய வானொலி நிலைய ஒலிப்பதிவு
10-15 பக்திப்பாடல்கள்
10-30 ஒலிபரப்பு முடிவு.

## இன்றைய பலன்

மாதம்— ஆனி
திகதி—15 (29-6-1984)
வாரம்—வெள்ளி
திதி—அமாவாசை காலை, 9-17ன் மேல் பிரதமை
நட்சத்திரம் — திருவாதிரை இரவு 8-09 வரை

மேடம்: அவசரப் புத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின்நிலைமை சீர்பெறும்.

இடபம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளைப் பெருகவைக்கும் தள்ளிவைத்தடக்கள் உம்மை அள்ளிஅணைத்திடுவர்.

மிதுனம்: இருள் மண்டிக் கிடக்கும் இன்று ஏமாற்றம் தாக்கும் குடும்பத்தில் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

கடகம்: இதயத்தைதொடும் சம்பவம் இடம்பெறும் சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

சிங்கம்: அரசியிலில் ஆர்வம் பிறக்கும் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும் இதன் மூலம் சிரமங்களும் தென்படலாம் லருக்கு எதிர்பாராததனவரவுமுண்டு.

கன்னி: உறவாடிக் கெடுப்பசிற்கு பகையாளிகள் வருவார்கள் உற்சாகம் குன்றும் பிரயாணத்தன்போது பொருள் தவறக்கூடும் சிலருக்கு உஷ்ணரோகம்தென்படலாம்.

துலாம்; குடும்ப வழியால் மனதிற்கு நிம்மதி பிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்கு சமரசமாக முடிவடையும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு சிறப்பானதினம்.

விருச்சிகம்: செய்தொழிலில் மந்தநிலை தென்படும் சதிசெய்வதற்கு சகாக்களே முன்நிற்பார்கள் இன்றுபிரயாணத்தை தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று.

தனுசு: இதமான வாழ்வு இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும் இறைபக்தி மேலோங்கும்.

மகரம்: தொழில் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப்படலாம் இனத்தவர்களுடன் தொடர்பு பெருகும் முன்னேற்றமான தினம்.

(7-ம் பக்கம் பார்க்க)




எங்கள் சொந்த மலை நாட்டுப் பண்ணைகளில் கிடைக்கும் பசும் பால், அம்பேவெல தொழிற் சாலையில், 'துமி-உலர்' முறையில், பேர்ஷாக்கான ஹைலெண்ட் முழு ஆடைப் பால் மா ஆக்கப்படுகிறது. அதனால் தான், செறிவான, செழுமையான ''ஹைலெண்ட்'', இங்கு கிடைக்கும் அதி பசுமையான பால் மாவாக விளங்குகிறது.

ஹைலெண்ட்
முழு ஆடைப் பால் மா

அதி பசுமை-அதி செழுமை-அதி சுவை

தேசிய பால் சபை உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ரஞ்சன்— அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும்**
**கோகிலா**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி — மஞ்சுளா
**மன்னவன்**
**வந்தானடி**

**வின்சர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**ரீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt....
**NIGHT CROSSING**
Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-45
கடைசி 3 தினங்கள் 7-00
Top entertainment of the Day. New way of Action Karate
**SHOGUN'S NINJA**
(Scope Color)

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ரஜனிகாந்த்
**6-ல் இருந்து 60 வரை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - உஷாநந்தினி
**மனிதனும் தெய்வமாகலாம்**
[புதிய பிரதி]
(ஈஸ்மன்கலர்)

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டுவளம் (ஆங்கிலம்)
5-35 சிறுவர் இசை (சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-25 'பிளேஹவுஸ்' (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 வனவிலங்குகள் பற்றிய நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-45 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 எதிர்கால நிகழ்ச்சிகள்
9-00 'ஈகிள் ஹஸ்லான்டட்' ஆங்கிலத் திரைப்படம்
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 திரைப்படத்தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத்தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
கலர்

## பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்றது. அத்தருணம் சங்க உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:—

தலைவர்:- திரு. ர. வி. துரையப்பா. உபதலைவர்:- திரு. அ. யேசுதாசன், திரு. எஸ். அல்போன்சஸ். செயலாளர்:-திரு. எஸ்.செல்வரத்தினம். உபசெயலாளர்:-திரு. அ. றெஜினோல்ட். பொருளாளர்:- திரு. எம்.கே. பத்மநாதன். செயற்குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவாகினர்.

## இன்றைய—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: மதிப்புயரும்பொது மக்கள் ஆதரவும் கிடைக்கும் புத்திரரால் புகழும் உண்டு புதினமும் கேட்பீர்.

மீனம்: செய்தொழிலில் தடுமாற்றம் தென்படும்வேண்டிய ஒருவரைப் பகைக்கக்கொள்ள நேரிடும் குடும்பத்தில் சிறுபிணி தோன்றும் மனத்திடம் விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

## அரிய சந்தர்ப்பம்

★ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பெயறிங்
இரண்டு மாத முழு நேர செய்முறைப்பயிற்சி உட்பட பயிற்சியளிக்கப்படும்.
★ எலக்ரிக்கல் வயறிங் ★ வெல்டிங்
★ எயர் கொண்டிசனிங்
எமது நிறுவனத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இரண்டு மாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.
★ SPOKEN ENGLISH
மீண்டும் ஆரம்பம்: 02-07-84

**JAFFNA TECHNICAL INSTITUTE**
(றெயில்வே கடவையருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பிழை திருத்தம்

25-06-84 ஈழநாடு பத்திரிகையில் வெளியான எனது கணவர் காலஞ்சென்ற வவனியசிங்கம் சுப்பிரமணியத்தின் 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பு சம்பந்தப்பட்ட விளம்பரத்தில் ''முன்னாள் விக்ரேஸ் உரிமையாளர்'' என்று தவறுதலாக போடப்பட்டுள்ளது.

இப்பிழை யாழ்ப்பாணம் ஸ்டான்லிவீதி விக்ரேஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. விக்டர் இம்மானுவேல் அவர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ இன்னல்களை உண்டுபடுத்தும் நோக்குடன் பிரசுரிக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

எனது கணவர் ''யாழ்ப்பாணம் எலக்ரிக்கல் றேட்ஸ்'' முன்னாள் உரிமையாளர் என்பதே சரியானது.

திருமதி. P. சுப்பிரமணியம்
No. 21, ஓட்டுமடம் றோட்,
யாழ்ப்பாணம்.

576

## ஹோம் பிறின்ஸ் லிமிட்.
## பூகோடை ஆலைத்துணிகள்

யாழ். புடவை வியாபாரிகட்கு
**ஓர் அரிய சந்தர்ப்பம்**

எம்மிடம் பணம் நிலையாக வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
**30% வருடவட்டி வழங்குவதுடன்**
புடவை வகைகளும் கடன் வசதியுடன் வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

**NATIONAL DELUXE**
**மின் விசிறிகள்**
**கடன் வசதியுடன் உண்டு**

விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# ஹோம் பிறின்ஸ் லிமிட்டெட்

82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

## வெற்றிடங்கள்
## (VACANCIES)

**Arasco Industrial Exports Ltd.**
KUSHIBA BUILDING
MAVIDDAPURAM, TELLIPPALAI.

1-8-84ந் திகதி தொடக்கம் மாவிட்டபுரத்தில் இயங்கவிருக்கும் மேற்கூறிய பழரசத் தொழிற்சாலைக்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வெற்றிடங்கள் | எண்ணிக்கைகள் |
|---|---|
| 1. பெண் தொழிலாளர்கள் [பழரசம் தயாரித்தலும் தகரத்தில் அடைத்தலும்] | 20 |
| 2. மேற்பார்வையாளர் [SUPERVISOR] [PRODUCTION] | 1 |
| 3. இயந்திர இயக்குனர் [MECHANIC] | 1 |
| 4. இரசாயன பரிசோதகர் [CHEMIST] | 1 |
| 5. எழுதுவினைஞர்கள் [ACCOUNTS] | 2 |
| 6. காசாளரும் நிர்வாக லிகிதரும் | 1 |
| 7. பொயிலர் மெக்கானிக் [BOILER MECHANIC] (கல்வித்தகமை — BOILER CERTIFICATE) | 1 |
| 8. விற்பனைப் பிரதிநிதி [SALES REPRESENTATIVE] (பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்) | 1 |
| 9. கட்டிட நிர்மாண வேலைக்கு வேலை ஆட்கள் | 10 |

கல்வித்தகமை: பதவி இல: 2—3—8—G. C. E [O/L] சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
பதவி இல: 4—5—6—G. C. E. [A/L] சித்தியும் [O/L]ல் ஆங்கில சித்தியும்.
விண்ணப்பதாரர்கள் அனுபவம் உள்ளவர்களாகவும் [தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ளவர்களாகவும்] இருத்தல் விரும்பத்தக்கது.
விண்ணப்பதாரர்கள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **15-7-84க்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும்.**

நிர்வாக முகாமையாளர்,
**A. I. EXPORTS LTD.**
Kushiba Building,
MAVIDDAPURAM, TELLIPPALAI.

(544)

## இன்றைய மகத்தான வெளியீடு

★ பாக்கியராஜ், பூர்ணிமா நடித்த
"ஊமை ஜனங்கள்" (V. G. P. Original)

★ மற்றும் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா நடித்த
"தனிப்பிறவி" (V. G. P. Original)

வடமாகாணத்திலேயே ஒறிஜினல் படப்பிரதிகளை அடிக்கடி வெளியீடு செய்யும் ஈடிணையற்ற ஒரே ஒரு ஸ்தாபனம்

# குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டு வீதி, (தொலைபேசி: 23665) யாழ்ப்பாணம்.

574

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இடம்பெயர்ந்த ஆசிரியர் சிலருக்கு மனநோய்!"

## இலங்கை தமிழ் ஆசிரிய சங்கத் தலைவர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

(மட்டக்களப்பு)

'ஜுலை வன்செயலால்இடம் பெயர்ந்த தமிழ் ஆசிரியர்களின் இன்றைய நிலை இக்கட்டான நிலையாகவே உள்ளது. எட்டு மாதங்களாக சம்பளமின்றி வறுமைப்போராட்டம் நடாத்திய ஆசிரியர்களில் சிலர் அதிர்ச்சி, கவலை, மனவிரக்தியடைந்து மனநோய் பிடித்து அலைகிறார்கள். இதுதான் இன்றையதமிழ் ஆசிரியர்கள்நிலை''

இவ்வாறு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு வடக்கு வட்டார கிளைக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தாய்ச் சங்கத் தலைவர் திரு. டி எல். கே. வனசிங்கா தனது உரையில் குறிப்பிட்டார்.

கிளைத்தலைவர் க. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''வன்செயலில் இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் விவகாரத்தைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் அங்கு திரும்பாமல் நிற்பது பிடிவாதத்துடன் அல்ல. போய் வாழமுடியாது என்ற கருத்தில்தான்.

''எட்டுமாத காலமாக வருமானம் எதுவுமின்றி ஒருவனால் எப்படி சீவியம் நடத்தமுடியும் என்பது ஒருபுறம் இருக்க; சமூகத்தில் மனிதனாக எவ்வாறு நடமாடமுடியும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும்:

ஆறுமாத காலங்கள் சம்பளமின்றி ஒரு ஆசிரியர் படும் கஷ்டத்தை நன்கு அனுபவத்தில் உணர்ந்துகொண்டவன் நான். இன்று இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை நாளை உங்களுக்கும் ஏற்படலாம். இந்நிலையில் அவர்களது பிரச்னைகளை நாம் எமது பிரச்னையாக கருதி தீர்வு ஏற்படுத்த போராடவேண்டும்.

''வடபகுதிக்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் சீவியம் நடாத்த வழி வசதியின்றி மேசன், தச்சுவேலைகள் செய்வதோடு தோட்டங்களில் கூலித்தொழில் செய்துவருகிறார்கள். இதுதான் எமது தமிழ் ஆசிரியர்களின் தலை எழுத்தாக அமைந்துவிட்டது.

''இவ்வாசிரியர்களின் இடமாற்ற விவகாரத்தில் வேறு எந்தவொரு தொழிற்சங்கமும் செயல்படாதவகையில் எமது சங்கம் தனது முழுச் சக்தியையும் கொண்டு செயல்பட்டுவருகின்றது. இதனால் ஏற்பட்ட தொலைபேசிச் செலவுமட்டும் 50 ஆயிரம் ரூபா ஆகும்.

''இந்நிலையில் இவ்விவகாரம் இறுதியில் கைக்கு எட்டி வாய்க்கு எட்டாத நிலையை அடைந்துவிட்டது. இருப்பினும் நாம் மனம் தளராமல் உறுதியான உள்ளத்துடன் போராட்டம் நடாத்திவருகின்றோம்.

எமக்கு வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது இவ்வெற்றிக்காக எத்தகைய சோதனைகள் வந்தாலும் ஏற்க நாம் தயாராக உள்ளோம். இவ்வெற்றிக்காக ஒவ்வொரு தமிழ் ஆசிரியர்களையும் பொறுத்தவரை தாம் வணங்கும் குலதெய்வங்களை பிரார்த்தனைசெய்யவேண்டும்.

''எமது சங்கத்தை பொறுத்தவரை யாருடைய பராமரிப்பிலோ அல்லது அரசியல்கட்சியின்அனுசரணையுடனோ செயல்படுவதல்ல. தனது சொந்தக் காலில்நின்று தனித்துவமான முறையில் செயல்படுகின்றது.

''உறுதியான கொள்கை, நேர்மையான வழி, எச்கட்டத்திலும் மனம்தளராது உறுப்பினர்களுக்குத் தன்னை அர்ப்பணித்துச் செயல்படுகின்றது.''

## கொழும்பு—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

றைய விழாநாயகனை 'வித்தி'யின் உள்ளத்திலிருந்து வார்த்தைகளாக வெளிவந்தன

தமக்களிக்கப்பட்ட கௌரவத்துக்கு பதிலுரை வழங்க எழுந்த அவரது அகத்தின் அழகு முகத்தில் பளிச்சிட்டது.

தமக்குப் பாராட்டு வழங்கிய சிங்கள நண்பர்களுக்கு சற்று வேடிக்கையாகவும் 'சீரியஸாக'வும் பதில் கூறிய வாறே வித்தி தமது பதிலுரையை ஆரம்பிக்கிறார்,

'19 4-ம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் உரையாற்றிய நண்பர் நாணயக்காரா தமிழ் மக்கள் மீது சிங்களத்தை திணிக்கக்கூடாது என வற்புறுத்தி உரையாற்றிய போது கூட்டத்தில் எழுந்த கரகோஷம் இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இரு சிங்கள அன்பர்களும் இங்கு கலந்து கொண்டமை அவர்களது அன்பையும் துணிவையும் எடுத்துக்காட்டுகிறது.

சிங்கள மக்கள் மீது எமக்கு எதுவித துவேஷமும் இல்லை. எம்மை வாழ விடுங்கள் என்று தான் கேட்கிறோம்.'' இப்படி வித்தி கூறியதும் சபையில் பலத்த கரகோஷம் ஒலித்தது.

''இராவணேஸ்வரன் நாடகத்தை தயாரித்துமேடையேற்றுமாறு திருமதி இரத்தினம் கேட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் இன்று இருக்கும் நிலையில் என்னதான் செய்யமுடியும் ஒத்திகை நடத்தவே முடியாத கட்டத்தில் நாடகம் போடுவது எப்படி?

யாழ்ப்பாண மக்கள் உயிர் வாழ்வதே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மாலை 4 மணிக்கே நகரம் வெறிச்சோடி விடுகிறது எனது மணிவிழாக்கூட பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரைதான் நடந்தது. எனினும் நிலைமை சீராகும் பட்சத்தில் அந்த நாடகத்தையும்தயாரிக்க முயற்சிப்பேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. து. தர்மராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலாநிதி அ, சண்முகதாஸ் எழுதிய 'துணை வேந்தர் வித்தி' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

## இருமடங்கு—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தாளர் கே.டானியல் பேசுகையில், ''யாழ். அரசாங்க அதிபராக நீங்கள் சேவையில் இருந்த காலம் கத்திமுனையில் நடப்பது போன்ற நேரப் ஆனாலும் சேவையை திருப்திகரமாகச் செய்த பெருமை உண்டு. இப்போது அமெரிக்கா செல்கிறீர்கள். அமெரிக்கர் நாட்டைத்தின்று கடலைக்குடித்தவர்கள் போன்ற கொள்கையுடையவர்கள். அங்குபோகும் நீங்கள் எவ்விதமாற்றமுமில்லாமல், திரும்பி வந்து நமக்குச் சேவையாற்ற வேண்டுமென்பதே எமது விருப்பம்'' என்றார்.

விருந்துபசாரம் முடிந்ததும் திரு தேவநேசன் நேசையா தம்பதிகளை, யாழ். புகையிரத நிலையம் வரை, யாழ். நலன் விரும்பிகள் கார் பவனியாக அழைத்துச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பு சென்ற திரு தேவநேசன் நேசையா இன்று வெள்ளிக்கிழமை புலமைப் பரிசில் கல்வியைத் தொடர அமெரிக்கா நோக்கிச்செல்லவுள்ளார். (மா)

## புவனேஸ்வரி—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

'சக்தி' வீரத்துக்குரியவளாக 'துர்க்கா' வடிவுபெற்று சிங்க வாகனத்தில் வீதியுலா வருவது முதலாகக்கொண்டு, அன்பர்கள் 'அடியார்கள் சமாதானம், அமைதிவேண்டி அன்னப்பறவையில் ஆடி அசைந்து வருவது போன்ற பல்வேறு திரு வடிவங்களில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் வருடாந்த உற்சவ கால பத்துநாட்களும் பக்தர்களுக்கு ஒளிக்காட்சி கொடுக்கின்றாள்.

## இன்று

(வேலணை)

வேலணை கெட்டில் மாதர் கிராம அபிவிருத்திச்சங்க புனரமைப்புக்கூட்டம் இன்று திருமதி மகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

## இந்திரா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பொதுநலவமைப்பு நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளும்பொருட்டு புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது இவர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது தெரிந்ததே. (வெ)

## மின் இணைப்பு வேலைகள்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் நீர்பாசன பொறியியல் அலுவலகத்திற்கு முன்பாக மின் மாற்று நிலைய அமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேலதிக அரசங்க அதிபரின் விடா முயற்சியால் இம்மாத முடிவுக்குள் மின் இணைப்பு வேலைகள் முடிவடைந்து விடும் என எதிர்பாக்கப்படுகிறது

இதனால் இச் சிறிய கிராமமும் பெரிய நீர்பாசன திட்டத்தின் கீழ் ஏற்று நீர்பாசன வாலிபர் திட்டம் நற்பயனைப் பெரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இம் மின் இணைப்பால் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் மேற்பார்வையின் கீழ் உள்ள 12 கிராமங்கள் மின் வசதியை இம் மாதம் பெறு[illegible] எதிர்பார்க்கப்படுகின்றது

# "யாழ்.நகரில் சிறந்ததொரு விளையாட்டரங்கு இல்லை"

## உதவி அரசாங்க அதிபர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொதுவான சகல வசதிகளும் கொண்ட ஒரு விளையாட்டு மைதானம் இல்லாததுகுறித்து யாழ். செயலக தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான திரு.கி.கோபாலரட்ணம்கவலை தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற இறுதி விளையாட்டுப் போட்டிக்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. கோபாலரட்ணம் மேற் குறிப்பிட்டகருத்தை தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்இவ்விளையாட்டு போட்டி நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன்நேசையாவும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ். துரையப்பாவிளையாட்டரங்கு, பொதுவிளையாட்டு மைதானமாக இருந்தபோதிலும் அது ஒருகட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதாகவும், எந்நேரமும் பூட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த திரு. கோபாலரட்ணம், பொதுமக்கள் பயன்படுத்தக்கூடியதாகத் தினசரி 3 மணிதொடக்கம் 6மணிவரை யாவது அவ்விளையாட்டரங்கை திறந்துவைக்கவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள்விடுத்தார்.

வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி தேவநேசன்நேசையா பரிசில்கள் வழங்கினர். (மா)

## வேலணையில் விளையாட்டு விழா

(வேலணை)

வேலணை இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் விளையாட்டு விழா நாளை வேலணை வங்களாவடி இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திரு. சு. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இப் போட்டியில் பிரதம விருந்தினராக வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு. ஐ. கிருபாகரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாட்சர சண்முகதாஸ் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல், மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ், ஊர்காவற்துறை விளையாட்டு அதிகாரி திரு. பி. பொன்னுச்சாமி, - வேலணை விளையாட்டு அதிகாரி திரு.கு. பீலிக்ஸ், திரு. ஏ. எப். செபமாலை ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவில் தாச்சிப் போட்டி, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் வலைபந்தாட்டம் முதலிய விளையாட்டுகள் நடைபெறவுள்ளன, இவற்றில் சில சுற்றுப் போட்டிகளாக ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு வெற்றிக் கேடயங்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படும். (சூ)

## யாருடையது ?

கோண்டாவிலைச் சேர்ந்த திரு.கந்தசாமி சின்னத்தம்பி, யாழ் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு முகம்மது றசீத் அஸ்றப், அரியாலை குசவன் மால்ஒழுங்கையைச்சேர்ந்ததிரு சரவணமுத்து முத்துச்சாமி, மண்டைதீவைச்சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை ஜெகசோதி, காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த திரு. கதிரவேலுகனகலிங்கம், கொழும்புத்துறை ஈச்சமொட்டையைச் சேர்ந்த திரு.அருணாசலம் தியாகராசா, கே. கே. எஸ் 3ம் குறுக்குத் தெரு திருமதி மேனகை தனபாலசூரியர் நவாலி நாச்சிமார் கோவில் வீதி திருமதி தவமலர் தம்பையா, ஊர்காவற்றுறை கருவில் செல்வி சொக்கலிங்கம் யோகாம்பிகை ஆகியோரின் அடையாளஅட்டைகளை யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கைவங்கியைச் சேர்ந்த திரு. சி. இராசேஸ்வரனும், கோப்பாய்தெற்கைச் சேர்ந்த திரு. செல்லையா கதிர்காமநாதனின்அடையாள அட்டையை திரு. கே. நாதன் என்பவரும், திரு. இரவீந்திரா என்பவர் மூன்று குளோப் திறப்புக்கள் கொண்டகோர்வையையும். உரும்பிராய்யைச் சேர்ந்த திரு கந்தன் சுப்பிரமணியம் என்பவரின் அடையாள அட்டையை திரு. துரைரத்தினமும், திருகோணமலை மத்திய வீதியைச்சேர்ந்த செல்வன் பொன்னுச்சாமி ஜெயக்குமார் என்பவரின் அடையாள அட்டையை ஒரு அன்பரும், தெல்லிப்பழை வடக்கைச் சேர்ந்த திரு நடராஜாகந்தையா என்பவரின் அடையாள அட்டையையும், பேர்ஸினையும். பணத்தையும் கோண்டாவிலைச்சேர்ந்த திரு. பா. நகுலேஸ்வரஐயரும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் வந்துபெற்றுக்கொள்ளவும்.

## மலையக ஆசிரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

மருத்துவச் சான்றிதழ்களுடன் வரும் ஆசிரியர்களை மீண்டும் பதவியில் அமர்த்துவதாக ஜனாப் ஓமார்தீன் உறுதியளித்திருப்பதாக திரு. மகாசிவம் தெரிவித்தார்.

## ரூ. 6 லட்சம் கடத்தல் பொருட்கள் சிக்கின

சென்னை, ஜுன் 28

இலங்கை கடத்தல் படகு ஒன்றிலிருந்து 6 லட்சத்து 40, 000 ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை சென்னை சுங்கஅதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (வெ)

## மரண அறிவித்தல்

### மாணிக்கவாசகர் சுயந்தன்

செல்வன் மாணிக்கவாசகர் சுயந்தன் காலமானார். இவர் தாவடியைச் சேர்ந்தவரும், வவுனியா நகர சபை வருமான பரிசோதகருமான தம்பிராசா மாணிக்கவாசகரினதும் திருநெல்வேலி பழஞ்சந்தையடி திருமதி பாக்கியராதாவினதும் கனிஷ்ட புத்திரனும், சுகந்தனின் தம்பியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 29-6-84 வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு நடைபெற்று திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 589

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுன் மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org